ஞாயிற்றுக்கிழமை, பொதுவிடுமுறை நாளில்

# காலை 7 - இரவு 10 மணி வரை மெட்ரோ ரயில் இயக்கப்படும்

சென்னை, ஜூலை 18: மெட்ரோ ரயில் நிர்வாகம் நேற்று வெளியிட்ட அறிவிப்பு:

மெட்ரோ ரயில் பயணிகளின் வேண்டுகோளுக்கு இணங்க மெட்ரோ ரயில் சேவைகள் இன்று முதல் (18ம் தேதி) ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் அரசு பொதுவிடுமுறை நாட்களில் காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரை

## நிர்வாகம் அறிவிப்பு

10 நிமிட இடைவெளியில் இயக்கப்பட உள்ளன. வார நாட்களில் காலை 5.30 மணி முதல் இரவு 10 மணி வரை இயக்கப்படுகின்றன. கூட்ட நெரிசல் மிகுந்த நேரங்களில் காலை 8 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் 5 நிமிட இடைவெளியில் ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. மற்ற நேரங்களில் 10 நிமிட இடைவெளியில் இயக்கப்படுகின்றன.

மெட்ரோ ரயில் நிலையங்களில் கொரோனா பாதுகாப்பு விதி மீறியதாக கடந்த மாதம் 21ம் தேதி முதல் நேற்று வரையில் 46 பயணிகளிடம் இருந்து ரூ.9,200 அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கூறப்பட்டுள்ளது.